# கிறிஸ்துவே வழி, சத்தியம், ஜீவன்

Translated from the original article, "Christ is the way, the truth and the life"

By *Watchman Nee*

*"அதற்கு இயேசு: நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"* (யோவான் 14:6).

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்," என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார். கிறிஸ்துவே தேவன் தருகிற வழி என்றும், கிறிஸ்துவே தேவன் தருகிற சத்தியம் என்றும், அதுபோல கிறிஸ்துவே தேவன் தருகிற ஜீவன் என்றும் இது தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்துவே நம் வழி; கிறிஸ்துவே நம் சத்தியம்; கிறிஸ்துவே நம் ஜீவன். கிறிஸ்துவின்மூலமாகவே நாம் பிதாவினிடத்தில் வருகிறோம். தேவனுடைய இருதயத்தில், அவரோடு தொடர்புடையது என்று ஒன்று உம் டானால் அது அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவே. அவர் நமக்கு எதைத் தருகிறார் என்றால் கிறிஸ்துவையே தருகிறார்; கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிற அநேகக் காரியங்களை அவர் நமக்குத் தரவில்லை.

அநேக வேளைகளில், ஆவிக்குரிய காரியங்களில், நமக்கு ஆவிக்குரிய எந்தப் பயனும் இல்லாத வெறுமனே ஒரு சொற்றொடரையோ அல்லது ஓர் எழுத்தையோதான் நாம் பார்க்கிறோம், தொடுகிறோம். நாம் தேவனுடைய குமாரனை அறியும்படிக்கு அவர் நம் கண்களைத் திறப்பதற்கு நாம் அவரிடம் எவ்வளவாய்க் கேட்கவேண்டியிருக்கிறது.

கிறிஸ்தவத்தின் ஊற்று, ஆழம், ஐசுவரியங்கள் ஆகியவைகளெல்லாம் தேவனுடைய குமாரனை அறிகிற அறிவோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற உண்மையில்தான் அதின் தனிச்சிறப்பு இருக்கிறது. நமக்கு வழிமுறையைப்பற்றி அல்லது உபதேசங்களைப்பற்றி அல்லது வல்லமையைப்பற்றி எவ்வளவு தெரியும் என்பது ஒரு பொருட்டல்ல. தேவனுடைய குமாரனைப்பற்றிய அறிவுதான் உண்மையிலேயே முக்கியம். இதுதான் காரியம். தேவனுடைய குமாரனை அறிவதுதான் வழி, தேவனுடைய குமாரனை அறிவதுதான் சத்தியம், தேவனுடைய குமாரனை அறிவதுதான் ஜீவன். நம் வல்லமை அவருடைய குமாரனை அறிகிற அறிவிலிருந்துதான் வருகிறது. தேவன் நமக்கு வேறு பல காரியங்களைத் தராமல் தம் குமாரனையே தருகிறார். ஆகவே, முழு விஷயமும் தேவனுடைய குமாரனை அறிகிற அறிவில்தான் அடங்கியிருக்கிறது.

## கிறிஸ்துவே வழி

"நானே வழி." இது இயேசுவின் வார்த்தை. இங்கு வழி என்று கூறப்பட்டிருப்பது வழிமுறையையும் குறிக்கக்கூடும். அவர்தான் நாம் தேவனிடத்தில் வருவதற்கான வழி என்றும், அவர்தான் நாம் தேவனை அடைவதற்கான வழிமுறை என்றும் அவர் இங்கு நமக்குத் தெரிவிக்கிறார். நாம் அவரைக் கொண்டிருந்தால், நாம் வழியைக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்; நாம் அவரைச் சொந்தமாக்கிக் கொண்டால் நாம் வழிமுறையைச் சொந்தமாக்கிக்கொண்டிருக்கிறோம் என்று பொருள். உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் இந்தப் பாடத்தை—கர்த்தராகிய இயேசுவே வழியும் கர்த்தராகிய இயேசுவே வழிமுறையும் என்ற பாடத்தை—குறைந்தபட்சம் ஒருமுறையாவது கற்றுக்கொள்ள வேண்டும்.

ம்ங்கள் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டிருந்தால், குறைந்தபட்சம் கர்த்தராகிய இயேசுவை தேவனிடத்திற்குச் செல்வதற்கான உங்கள் வழியாக நம்புகிற இந்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால், அவரே வழி; அவரில்லாமல் ஒருவனாலும் தேவனிடத்தில வர முடியாது. இந்த வழியில் எப்படி நடப்பது என்று உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிற எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் தெரியும். எண்ணிலடங்காத உண்மையான விசுவாசிகள் குறைந்தபட்சம் இந்தப் பாடத்தையாவது, அதாவது தேவனுடைய குமாரனாகிய நசரேனாகிய இயேசுவின்மூலம் தேவனிடத்திற்கு வருகிற பாடத்தை, கற்றுக்கொம் டிருக்கிறார்கள் என்பதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இந்த வழியில் நாம் குறைந்தபட்சம் ஒருமுறையாவது பயணம்செய்திருக்கிறோம். இந்த வழி கிறிஸ்துவே. இந்த வழி கிறிஸ்துவேயல்லாமல் வேறொன்றல்ல. இது அவருக்கு வெளியே இருக்கக்கூடிய எந்த வழிமுறையும் அல்ல. ஆரம்பத்தில் நாம் இரட்சிக்கப்படும் நேரத்திலும், அதற்குப்பின் அடுத்துவரும் வேறு எந்த நேரத்திலும் நாம்

தேவனிடத்தில் வருவதற்கு கர்த்தராகிய இயேசு மட்டுமே ஒரே வழி, வேறு எந்த வழிமுறையும் இல்லை என்பதை நாம் பார்க்க வேண்டும்.

சில கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சில வழிமுறைகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நம் சுயத்தின் மூலமாக அல்ல, மாறாக கிறிஸ்துவின்மூலமாகவே வெற்றிபெறுகிறோம் என்பதைப்பற்றிய ஒரு செய்தி ஒருமுறை கொடுக்கப்பட்டபோது, ஒரு சகோதரன் அந்தச் செய்தியைப் பேசிய சகோதரனின் கையைப் பிடித்துக்கொண்டு, “அநேக ஆண்டுகளாக நான் தொடந்து தோற்றுக்கொண்டேயிருக்கிறேன்; ஆனால், இன்று எல்லாம் சரியாகிவிட்டது,” என்று கூறினார். இதைக் கேட்டதும், பிரசங்கித்த சகோதரன், “அது எப்படி?” என்று கேட்டார். அதற்கு அந்தச் சகோதரன், “ஏனென்றால், இப்போது வெற்றிபெறுவதற்கான வழியை நான் கற்றுக்கொண்டேன் என்று நினைக்கிறேன். இன்று நான் ஒரு புதிய வழிமுறையைக் கற்றுக்கொண்டேன். என்னால் அல்ல, கர்த்தர்மூலமாகவே வெற்றி கிடைக்கிறது,“ என்று பதிலளித்தார். உடனே, பிரசங்கித்த சகோதரன் மறுமொழியாக, “நீ கண்டதெல்லாம் வெற்றிபெறுவதற்கான ஒரு வழிதான் என்றால் நிச்சயமாக நீ மீண்டும் தோற்றுப்போவாய்,” என்று வெளிப்படையாகக் கூறினார். அவர் ஏன் இப்படிக் கூறினார்? ஏனென்றால், “நானே வழி,” என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அவர் மட்டுமே வழி, அவர் மட்டுமே வழிமுறை. வழி அவருக்கு வெளியே இல்லை; ஏனென்றால், அவரே வழி. நாம் பார்ப்பதெல்லாம் வெறுமனே ஒரு வழிமுறைதான் என்றால், அது வீரியம் இல்லாதது என்று நாம் சீக்கிரத்தில் கற்றுக்கொள்வோம்.

மற்றவர்களின் அனுபவத்தை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம்; அது மிகவும் விலையேறம்பெற்றது என்றும் நாம் நினைக்கிறோம். ஆனால், மற்ற நபர் தொட்டு அனுபவித்த கர்த்தரைப் பார்ப்பதற்குப் பதிலாக ஒரு வழிமுறையை மட்டுமே நாம் பார்க்கிறோம்; இதன் விளைவாக நாம் தோல்விக்குப்பின் தோல்வியைச் சந்திக்கிறோம். நாம் கர்த்தரை வழியாகக் கற்றுக்கொள்ளாததே இதற்கு முக்கியமான காரணம்.

கர்த்தர்மேல் விசுவாசம் வைப்பதும், ஒரு சூத்திரத்தை விசுவாசிப்பதும் உண்மையிலேயே இரண்டு வித்தியாசமான அசைவுகள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய கிருபையால், தான் எப்பேர்ப்பட்ட நபர் என்பதைப் பார்க்க ஒரு கிறிஸ்துவனுடைய கண்கள் திறக்கம்பட்டிருக்கின்றன; ஆகையால், அவன் தன்னைத் தாழ்த்தி, கர்த்தர்மேல் விசுவாசம் வைத்து, தன்னால் செய்யமுடியாததைக் கர்த்தர் தனக்குள் செய்வதற்கு அவன் கர்த்தரை நம்புகிறான். இதன் விளைவாக அவன் விடுதலை பெற்று தேவனுக்குமுன்பாக முழுத் திருப்தியடைகிறான். பின்பு, இன்னொரு விசுவாசி அங்கு வருகிறான். அவன் முதல் நபரின் சாட்சியைக் கேட்டவுடன், தான் எவ்வளவு உபயோகமற்றவன் என்பதைப் பார்க்கும்படிக்குத் தன்னைப் பிரகாசிப்பிக்க அவனும் தேவனிடம் வேண்டுகிறான். தேவன்மேல் விசுவாசம் வைக்கவும், தன்னைத் தாழ்த்தி கையளிக்கவும் அவனும் கற்றுக்கொள்ளுகிறான். இருந்தபோதும் என்ன நடக்கிறது என்றால் முதல் சகோதரன் அனுபவித்த விடுதலையை இவன் பெறுவதில்லை. இது சற்று நூதனமாகத் தோன்றக்கூடும்.

இதற்குக் காரணம் என்ன? என்ன காரணம் என்றால், முதல் சகோதரனிடம் ஜீவிக்கும் விசுவாசம் இருக்கிறது; அது கர்த்தரைத் தொடவும், தேவன்மேல் விசுவாசம் வைக்கவும் அவனுக்குப் பலத்தைக் கொடுக்கிறது. இரண்டாவது சகோதரனிடம் விசுவாசம் இல்லை; அவனிடத்தில் “விசுவாச சூத்திரத்தின் ஒரு நகல்” மட்டுமே இருக்கிறது; அதனால் அவன் தேவனை எட்டுவதில்லை. சுருக்கமாகச் சொல்வதனால், இரண்டாவது சகோதரன் கர்த்தரைப் பெற்றுக்கொள்ளவில்லை; மாறாக, ஒரு வழிமுறையைம் பெற்றுக்கொள்ளுகிறான். வழிமுறைக்கு வல்லமையோ அல்லது வீரியமோ கிடையாது; வழிமுறை கிறிஸ்துவாக இல்லாததால் அது வெறுமனே ஒரு செத்த காரியம்.

கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் ஆவிக்குரிய ஒவ்வொரு காரியமும் செத்தது. இந்த விஷயத்தை நாம் நன்றாக அடிக்கோடு இட்டுக்கொள்வோம். “இன்னொரு நபர் விசுவாசிக்கிறார்; அவருடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கிறது; நானும் விசுவாசிக்கிறேன்; ஆனால், என் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லையே. தேவன் அவனிடத்தில் கிருபையாயிருக்கிறார்; ஆனால், அவர் ஏன் என்னிடத்தில் கிருபையாயிருக்கிறதில்லை?” என்று சில சகோதர சகோதரிகள் உள்ளுக்குள் ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள் ஒரு காரியத்தைத்தான் விசுவாசிக்கிறார்கள்; ஆகையால், அது செத்தது என்பதை அவர்கள் உணராமல், தேவன் பட்சபாதம் உள்ளவர் என்று அவர்கள் அவரைக் குற்றம்சாட்டுவதுபோல் தோன்றுகிறது.

சூத்திரமோ அல்லது வழிமுறையோ வேலைசெய்யாது. கிறிஸ்து மட்டுமே ஜீவிக்கிறார். ஒருவன் திரளான வழிமுறைகளாலான ஒரு தொகுப்பைக் கற்றுக்கொண்டால்கூட அவன் கிறிஸ்தவனாக ஆகிவிட முடியாது; ஒருவனுக்குக் கல்விகற்பித்து அவனைக் கிறிஸ்தவனாக்க முடியாது. ஏனெனில், தேவனுடைய பிள்ளைகள் பிறக்க வேண்டும், அவர்கள் கல்விகற்பதால் தேவனுடைய பிள்ளைகளாக மாறி விடுவதில்லை.

"நானே வழி," என்று கர்த்தராகிய இயேசு உறுதியாகக் கூறுகிறார். கிறிஸ்துவே வழி; கிறிஸ்துவே வழிமுறை. பிரியமான நண்பர்களே, கிறிஸ்து உங்களுடைய வழியாக இருக்கிறாரா? கிறிஸ்து உங்களுடைய வழிமுறையாக இருக்கிறாரா? அல்லது உங்களிடம் ஏதோ ஒரு வழியும், வழிமுறையும்தான் இருக்கிறதா? கிறிஸ்து நம் வழிமுறையாக இருந்தால் எல்லாம் வெற்றிகரமாக இருக்கும் என்பதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால், நம்மிடம் இருப்பது வெறுமனே ஒரு வழிமுறைதான் என்றால் அது எவ்வளவுதான் நல்லதாகவும், வழுவாததாகவும், ஒப்பிடமுடியாததாகவும் இருந்தாலும் சரி, அது செத்ததுதான்; அதற்கு ஆவிக்குரிய எந்த மதிப்பும் கிடையாது.

ஒருமுறை கர்த்தருடைய வேலைக்காரர் ஒருவர் ரோமர் 6-8யைப்பற்றி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு செய்தி கொடுத்தார். அந்தச் செய்தியைக் கேட்டபிறகு ஒரு சகோதரன், "இன்று நான் வெற்றியின் வழியைப் புரிந்துகொண்டேன். இப்போது நான் தெளிவாக இருக்கிறேன். இதற்குமுன் நான் தோற்றதுபோல இனிமேல் நான் தோற்கமாட்டேன் என்று நான் விசுவாசிக்கிறேன்," என்று கூறினான். இன்னொரு சகோதரன் பிரசங்கித்த சகோதரனிடம் வந்து, தன் தலையைக் கொஞ்சம் மேலும் கீழும் ஆட்டினான். பிரசங்கித்த சகோதரன் அவனிடம், "நீ எப்படி உணர்கிறாய்?" என்று கேட்டபோது, "அதை எப்படி விவரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், கர்த்தர் என் கண்களைத் திறந்துவிட்டார். நான் கர்த்தரைப் பார்த்துவிட்டேன் என்று என்னால் கூறமுடியாவிட்டாலும், நான் கர்த்தரைப் பார்க்கவில்லை என்றும் சொல்லத் துணியமாட்டேன்," என்று பதிலளித்தான். இந்த இரண்டாவது சகோதரன் ஒரு வழிமுறையைம் பெற்றுக்கொள்ளவில்லை; மாறாக. கர்த்தரையே பெற்றுக்கொண்டான். அதன் விளைவாக. அவன் தளத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டான். ஆனால், முதல் சகோதரனோ மீண்டும் தோற்றுப் போனான். ஏனென்றால், முதல் சகோதரன் ஒரு வழிமுறையைத்தான் பெற்றுக்கொண்டானேதவிர கர்த்தரைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகையால், அதற்கு எந்த மதிப்பும் இல்லை.

அநேக வேளைகளில், நாம் ஒரு செய்தியைக் கேட்பதின் உள்நோக்கம்கூடத் தவறாகவே இருக்கிறது. நாம் கர்த்தரைப் பார்க்கும்படிக்கு அவரிடம் வெளிப்பாட்டைக் கேட்பதற்குப்பதிலாக, நாம் நம்மோடு கொண்டுசெல்வதற்கு நம் மூளையைப் பயன்படுத்தி ஒரு வழிமுறையை மனப்பாடம்செய்ய நாம் முயற்சிசெய்கிறோம். நாம் அந்த வழிமுறையைப் பின்பற்றினாலுங்கூட நாம் எதையும் சாதிக்கப் போவதில்லை. ஒருவேளை நாம் கர்த்தரைப் பார்த்துவிட்டோம் என்று சொல்லத் துணியும் அளவுக்கு நம்மிடம் நிச்சயம் இல்லாமல், சில வேளைகளில் நாம் அரைகுறையாக ஏதோவொன்றைப் பார்த்ததுபோல் தோன்றுகிறது. இருந்தபோதும், நாம் அவரை நிச்சயமாகப் பார்க்கிறோம்; இப்பேர்ப்பட்ட உட்பார்வை உண்மையான மாற்றத்தைக் கொண்டுவருகிறது. இதுதான் வழி என்பதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாம் ஏதோவொரு வழிமுறையைக் கற்றுக்கொண்டோம் என்பதல்ல; மாறாக, நாம் கர்த்தரையே அறிந்துவிட்டோம், கர்த்தரே வழிமுறை என்று நமக்குத் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காரணத்தினால், நாம் ஒரு செய்தியை அல்லது ஒரு சாட்சியைக் கேட்கும்போது நாம் அதில் கர்த்தரைச் சந்திக்கிறோமா அல்லது ஒரு வழிமுறையைப் புரிந்துகொள்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துப்பார்க்க வேண்டும். கர்த்தரை அறிகிற அறிவிலே விடுதலை இரும்பதைம்போல ஒரு வழிமுறையை அறிவதிலே எந்த விடுதலையும் இல்லை. கர்த்தர் மற்றவர்களுக்கு எப்படி உதவிசெய்கிறார் என்பதைக் கேட்பது நம்மை இரட்சிக்காது. நாம் கர்த்தர்மேல் வைக்கும் விசுவாசம் மட்டுமே வீரியமுள்ளது. மற்றவர்களுடைய வார்த்தைகளும் அதையே சொல்வதுபோல் தோன்றக்கூடும்; ஆனால் உண்மை என்னவென்றால், இரம் டுக்குமிடையேயுள்ள வித்தியாசம் இரு துருவங்களுக்கிடையேயுள்ள வித்தியாசம் போன்றது. கர்த்தர் ஜீவனின் கர்த்தர். கர்த்தரைத் தொடுவது மட்டுமே ஜீவனைத் தருகிறது.

### கிறிஸ்துவே சத்தியம்

"நானே வழி" என்று மட்டும் அவர் கூறாமல் "நானே சத்தியம்" என்று அவர் கூறுகிறார். சத்தியம் என்பது கிறிஸ்துவைப்பற்றிப் பேசப்பட்ட வார்த்தைகளைக் குறிக்கவில்லை; அது கிறிஸ்துவே; கிறிஸ்துவே சத்தியம்.

இயேசுவைப்பற்றிய போதனைகளையும், பொருள்விளக்கங்களையும் மட்டுமே கிறிஸ்த வர்கள் பெரும் பாலும் சத்தியம் என்று எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் சத்தியம் என்றால் ஒரு காரி யத்தைத் தொடர்புபடுத்துவதல்ல; மாறாக, கிறிஸ்து என்ற நபரே சத்தியம். "சத்தியத்தையும் அறி வீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).

சகோதர சகோதரிகளே, எத்தனை சத்தியங்கள் உண்மையாகவே நம்மை விடுதலையாக்கியிருக்கின் றன என்று சிந்தித்துப்பாருங்கள். சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ஆனால், எத்தனை நேரங்களில் சத்தியம் நமக்கு வெறுமனே ஓர் உபதேசமாக மட்டுமே இருக்கிறது. கிறிஸ்துவைப் பார்ப்பதற்கு நம் கண்கள் திறக்கம்படவில்லை. அநேக உபதேசங்களைக் குறித்து சில பத்து ஆண்டுகளாக நாம் பேசிக்கொண்டேயிருக்கக்கூடும். ஆனாலும், நாம் இன்னும் பார்க்கவில்லை. அநேக உபதேசங்களை சில பத்து ஆண்டுகளாக நாம் கேட்டுக்கொண்டேயிருக்கக் கூடும். இருப்பினும், நாம் இன்னும் பார்க்கவில்லை. கிறிஸ்துவுடனேகூட மரிக்கிற மரணத்தை அறியா மலேயே "கிறிஸ்துடனேகூட மரித்தல்" என்ற உபதேசத்தைக்குறித்து மக்களால் பேசமுடியும். உயிர்த் தெழுந்த ஜீவனின் வல்லமையை அனுபவிக்காமலே உயிர்த்தெழுந்த ஜீவனைப்பற்றிப் பேசமுடியம். நாம் வெறுமனே உபதேசத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், நாம் செத்த ஏதோவொன்றைக் கையாளுகிறோம் என்று பொருள்.

ஒருமுறை ஒரு நபர் ஒரு சகோதரனுக்குப் பின்வருமாறு எழுதினார்: "ஒரு சகோதரன் எனக்கு விரோத மாகப் பாவம்செய்துவிட்டான். நான் அவனை மன்னிக்கவேண்டுமா வேண்டாமா என்று தெரியவில்லை. ஆகையால், இந்த விஷயத்தில் நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எனக்குக் கூறுமாறு வேம் டுகிறேன். தேவனுக்குமுன்பாக என் இருதயம் மிகவும் அமைதியாக இருக்கிறது. நான் அவனை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் கூறினால் நான் மன்னித்துவிடுவேன். நான் அவனை மன்னிக்கக் கூடாது என்று நீங்கள் நினைத்தால் நான் அவனை மன்னிக்கமாட்டேன்." சகோதரர்களே, இப்பேர்ப்பட்ட கிறிஸ்தவனைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? எனக்குப் பிரியமான ஒருவர் மரித்துவிடுகிறார் என் றும், அப்போது நான் ஒருவருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதுகிறேன் என்றும் வைத்துக்கொள்வோம்: "எனக்குப் பிரியமான ஒருவர் இறந்துவிட்டார். ஆகையால் நான் இழவுகொண்டாட வேண்டுமா வேண் டாமா? நான் அழ வேண்டும் என்று நீங்கள் சொன்னால் நான் அழுவேன்; அழக்கூடாது என்று சொன்னால் நான் அழமாட்டேன்." ஒருவன் இப்படி விசாரித்தால் நீங்கள் நிச்சயமாக நகைப்பீர்கள். ஏனென்றால் இப்படிக் கேட்பது பொருளற்றது. அழச்சொல்லுகிறபோது அழுதால் அல்லது அழக்கூடாது என்று சொல்லுகிறபோது அவன் அழாமல் இருந்தால் அவன் இழவுகொண்டாடுவது அல்லது இழவு கொண்டாடாமல் இருப்பது நிஜமாக இருக்காது. இரண்டுமே பொய்யாகத்தான் இருக்கும். ஆகையால், அவை செத்த கிரியைகள், ஜீவனல்ல. உன் சகோதரனை மன்னிக்கிறாய் அல்லது மன்னிக்காமல் போகி றாய். செத்த உபதேசத்தில் நடப்பது போலியான நடிப்பாகும்.

நண்பர்களே, எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அது கிறிஸ்து நம்மில் வாழ்கிற விஷயமாக இல்லாவிட்டால் அல்லது கிறிஸ்துவே நம் சத்தியமாக இல்லாவிட்டால்—அதாவது உபதேசம் என்ற தளத்தில் செய்யப்படுகிற எல்லாமே—செத்த கிரியைதான். அதில் எந்த ஜீவனும் இல்லை, அது ஜீவிக் கிறதாக இல்லை. இங்கு நீங்கள் வித்தியாசத்தைப் பார்க்கிறீர்களா? இது எவ்வளவு பெரிய வித்தியாசம் என்றால், அதைக் கவனிக்காமல் இருக்க முடியாது. வேலைசெய்வதற்கு நம் நினைவாற்றல் தேவைம் படுகிறது; ஆனால், ஜீவனோ எந்த வெளிப்புறத் தூண்டுதலுமின்றி தானாகவே செயல்படுகிறது. ஜீவ னின் நிறைவினால் பேசப்படும் வார்த்தை நம் நினைவாற்றலால் உந்தித்தள்ளப்படவில்லை. மாறாக, அது நமக்குள் இருக்கும் ஒரு வல்லமையால் உந்தித்தள்ளப்படுகிறது. உபதேசமோ அல்லது போத னையோ அல்ல, மாறாக கர்த்தரே நம்மேல் அதிகாரம் கொண்டவர். ஆவிக்குரிய நிஜம் கிறிஸ்து வில்தான் இருக்கிறது என்பதைப் பார்க்க தேவன் நம் கண்களைத் திறக்கிற ஒரு நாள் நிச்சயமாக நம் வாழ்க்கையில் இருக்க வேண்டும். நாம் ஒரு சில குறிப்பிட்ட உபதேசங்களை நினைவில்வைத்துக் கொண்டு, அதன்படி நடக்க முயற்சிசெய்யவில்லை. கிறிஸ்துவே நம்மில் வாழ்கிறார்; அவரே நம் சத்தியம்; ஆகையால் அது வாழ்ந்துகொண்டிருக்கிறது.

ஒருமுறை ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனால் புண்படுத்தப்பட்டான். அவனால் அதை சகித்துக் கொள்ளமுடியவில்லை; எனவே, அவன் தன்னைப் புண்படுத்திய சகோதரனை மிகவும் காட்டசாட்ட

மாகத் திட்டிவிட்டான். அதன்பின் அவனுடைய மனச்சாட்சி அவனை உறுத்த ஆரம்பித்தது. தன்னைப் புண்படுத்திய சகோதரனிடம் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆனாலும், அந்தச் சகோதரன் தன்னை எவ்வளவாய்ப் புண்படுத்தினான் என்பதை அவன் மீண்டும் யோசித்துப் பார்த்தபோது அவனுடைய கோபம் மீண்டும் கிளர்ந்தெழுந்தது. இருந்தபோதும், அந்தச் சகோதரனிடம் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற உணர்வு அவனிடம் இன்னும் இருந்தது. எனவே, அவன் அந் தச் சகோதரனுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று தீர்மானித்தான். அவன் தன் பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தான்: "நான் உன்னைத் திட்டியது தவறு என்று நான் உணர்கிறேன்." ஆனாலும், தன்னை இவ்வளவு அதிகமாகப் புண்படுத்திய அந்தச் சகோதரன் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்ற எம் ணம் அவனுக்கு மீண்டும் வந்தபோது, அவனுடைய கோபம் இன்னொரு தடவை திரும்பிவந்தது. கொஞ்ச நேரம் காத்திருந்தபிறகு, அவன் மீண்டும் தன் பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தான். எழுதிக் கொண்டிருந்த எல்லா நேரமும் தன் இருதயத்தில் கோபம் இருந்ததை அவன் உணர்ந்தான். அவன் கடிதத்தை அஞ்சல்மூலம் அனுப்பியபிறகும்கூட இன்னும் கோபமாகவே இருந்தான். வெளித்தோற்றத் தின்படி பார்த்தால் இந்தக் கடிதம் ஒரு கிறிஸ்தவனால் எழுதப்பட்டதுபோல் தோன்றும். ஆனால், உப தேசத்தின்நிமித்தம்தானேதவிர, ஜீவனின் காரணமாக அவன் அதை எழுதவில்லை என்று நமக்கு நன் றாகத் தெரியும். அவன் மன்னிப்பு கேட்டு கடிதம் எழுதினாலும்கூட, அவன் இருதயம் முழுவதும் உக்கிர மான கோபத்தால் நிறைந்திருந்தது. ஒருவேளை அவன் அந்தச் சகோதரனைச் சந்திக்க நேர்ந்தால், அவன் அவனுக்கு வாழ்த்துதல் கூறி, கைகுலுக்கவும் செய்வான். இருந்தபோதும், அவனுக்குள் அவ னுடைய குழப்பம் இன்னும் போகவில்லை. எனவே, அவனுடைய வார்த்தைகள் இயற்கையானவையாக இருப்பது சாத்தியமில்லை; இயற்கையானவை என்று கூறமுடியாது.

பிரியமானவர்களே, நாம் இப்போது வித்தியாசத்தைப் பார்க்கிறோமா? கர்த்தரே சத்தியம். எப்போ தெல்லாம் அது உபதேசமாக இருந்து, கர்த்தராக இல்லாமல் போகிறதோ, அப்போது அது செத்தது. ஆவிக்குரிய எல்லா விஷயங்களிலும் கர்த்தர் இருந்தால் அது ஜீவன். கர்த்தர் இல்லையென்றால் அது மரணம். கர்த்தர் நமக்குள் பிரகாசித்து, கிரியைசெய்வதின் விளைவாக நாம் ஒரு காரியத்தைச் செய் தால், அப்போது அந்தக் காரியம் ஜீவிக்கிறதாயிருக்கிறது.

## கிறிஸ்துவே ஜீவன்

"நானே வழியும், சத்தியமுமாயிருக்கிறேன்," என்ற வார்த்தைகளைத் தொடர்ந்து "நானே ஜீவனு மாயிருக்கிறேன்," என்று கர்த்தர் கூறுகிறார். ஜீவனின் விளைவாக எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே வேலை வெளிவருகிறது என்ற உண்மை நமக்குத் தெரியும். ஆனால், வேலை ஜீவனுக்குப் பதிலீடாக இருக்க முடியாது. வேலை ஜீவன் அல்ல என்பதில் நாம் இன்று தெள்ளத்தெளிவாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஜீவனுக்கு எந்த முயற்சியும் தேவை இல்லை. ஜீவன் கிறிஸ்துவே.

கிறிஸ்தவர்களாக இருக்க மக்கள் எவ்வளவு கடுமையாகப் பிரயாசப்படுகிறார்கள். நாம் தினமும் கடும் முயற்சி செய்வதின்மூலம் எவ்வளவாய்க் களைப்படைகிறோம். இந்த உபதேசங்கள் மிகவும் கண்டிப் பானவை; ஏனென்றால் நாம் தாழ்மையாகவும், களிவானவர்களாகவும், மன்னிக்கிறவர்களாகவும், நீடிய சாந்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அவைகள் நம்மிடம் கோருகின்றன. அவைகள் உம் மை யாகவே நம்மைக் களைப்படையச் செய்கின்றன. கிறிஸ்தவனாக இருப்பது ஒரு கடினமான காரியம் என்பதை அநேகர் ஒப்புக்கொள்ளுகிறார்கள். குறிப்பாக இளம் விசுவாசிகளைப் பொறுத்தவரை இது உண்மை. எவ்வளவு அதிகமாக அவர்கள் முயற்சிசெய்கிறார்களோ, அது அவ்வளவு அதிகக் கஷ்டமாக மாறுகிறது. ஒரு குறிப்பிட்ட காலம்வரை முயற்சிசெய்தபிறகும் ஒரு கிறிஸ்தவனுக்குரிய எந்தத் தன்மை யும், ஒத்திருத்தலும் அவனிடம் இல்லை.

சகோதர சகோதரிகளே, கிறிஸ்து ஜீவனாக இல்லையென்றால் *நாம்தான்* வேலைசெய்ய வேண்டும். ஆனால், *கிறிஸ்து* ஜீவனாக இருந்தால், நாம் போராட வேண்டிய தேவையில்லை. கிறிஸ்துவே ஜீவன் என்று நாம் மீண்டும் மீண்டும் கூற விரும்புகிறோம்; கூறுகிறோம். வேலை கிறிஸ்துவுக்குப் பதிலீடாக ஒருபோதும் மாற முடியாது.

தேவனுடைய மக்களிடையே ஒரு பயங்கரமான தவறு பரவியிருக்கிறது. அதாவது ஜீவன் என்பது தங்கள் சொந்த பலத்தால் தாங்கள் செய்ய வேண்டிய ஏதோவொன்று; இல்லையென்றால் அங்கு ஜீவன்

இருக்காது என்று அநேகர் கருதுகிறார்கள். அங்கு ஜீவன் இருந்தால், நாமாகவே சொந்தமாக எதையும் செய்வதற்கு மிகச் சிறிய அளவில்கூட தேவை இருக்காது; மாறாக ஜீவன் இயல்பாகவே பாய்ந்தோடும் என்பது நாமெல்லாரும் உணர வேண்டிய ஒன்றாகும். நம் கண்கள் எப்படிப் பார்க்கின்றன என்றும், நம் காதுகள் எப்படிக் கேட்கின்றன என்றும் ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள். நம் கண்கள் மிகவும் இயல்பாகப் பார்க்கின்றன; நம் காதுகள் எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே கேட்கின்றன; ஏனென்றால், அவைகளில் ஜீவன் இருக்கிறது. இந்த விஷயத்தில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஜீவன் இயல்பாகவே வேலையாகப் பாய்ந்தோடுகிறது; ஆனால், வேலை ஜீவனுக்குப் பதிலீடாக ஒருபோதும் இருக்க முடியாது.

சில வேளைகளில் வேலை, அங்கு ஜீவன் இல்லை என்பதை அல்லது ஜீவன் பலவீனமாக இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஜீவனின் விளைவாக நல்ல ஒழுக்கநெறிமுறைகள் வெளிவரும்; ஆனாலும், நல்ல ஒழுக்கநெறிமுறைகள் ஜீவனுக்குப் பதிலீடாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு சகோதரன் மிகவும் மென்மையானவனாகவும், மிதமானவனாகவும், அடக்கமானவனாகவும் இருக்கக்கூடும். “இந்தச் சகோதரனின் ஜீவன் மோசமானதல்ல,” என்று சிலர் அவனைப் பாராட்டக்கூடும். இல்லை, அவன் தவறான சொற்றொடரைப் பயன்படுத்திவிட்டான். ஏனென்றால், “நானே ஜீவன்,” என்று கர்த்தர் கூறுகிறார். இந்தச் சகோதரன் எவ்வளவுதான் மென்மையானவனாகவும், மிதமானவனாகவும், அடக்கமானவனாகவும் இருந்தாலுங்கூட, இவை கிறிஸ்துவிடமிருந்து வரவில்லையென்றால், இவை ஜீவனாகக் கருதப்படமாட்டாது. இந்த மனிதனிடத்தில் நல்ல மனநிலை இருக்கிறது அல்லது இவன் மற்றவர்களுக்கு மிகவும் அபூர்வமாகத்தான் பிரச்சினை உண்டாக்குகிறான் அல்லது இவன் மக்களை எப்போதும் கனிவாக நடத்துகிறான், இவன் ஒருபோதும் சண்டைபோடுவதில்லை என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அவன் ஐசுவரியமான ஆவிக்குரிய ஜீவனைக் கொண்டிருக்கிறான் என்று அவனைம் பற்றி சொல்ல முடியாது. இவைகளெல்லாம் அவனுக்கு இயல்பாகவே வருமென்றால், அவை ஜீவன் அல்ல; ஏனென்றால், அவை கிறிஸ்துவிடமிருந்து வரவில்லை.

வேறு சிலரிடம் இன்னொரு எண்ணம் இருக்கிறது. ஜீவன் என்றால் வல்லமை என்று அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள். கர்த்தரை ஜீவனாகக் கொண்டிருத்தல் என்றால் நன்மைசெய்ய அவரால் வல்லமை கொடுக்கம்பட்டிருக்கிறது என்று பொருள். இருந்தபோதும், நம் வல்லமை என்பது ஒரு காரியம் அல்ல; மாறாக, கிறிஸ்துவே என்று நமக்குக் காண்பிக்கிறார். நம் வல்லமை என்பது காரியங்களைச் செய்வதற்கான பலம் அல்ல; மாறாக, அது ஒரு நபர். நமக்கு ஜீவன் வல்லமை மட்டும் அல்ல; அது ஒரு நபரும் ஆகும். அது நாம் நம் நற்கிரியைகளைக் காண்பிக்க கிறிஸ்துவைப் பயன்படுத்துவதற்குப்பதிலாக, நம்மில் தம்மை வெளியரங்கமாக்குகிற கிறிஸ்துவாகும்.

ஒருமுறை ஒரு சகோதரன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டான். ஒரு மூத்த கிறிஸ்தவர் அவனிடம், “நீ கூட்டத்திற்கு ஏன் அங்கு போகிறாய்?” என்று கேட்டார். அதற்கு அவன், “அங்கு ஜீவன் இருக்கிறது. எனவே, அங்கு போகிறேன்,” என்று பதிலளித்தான். அந்த மூத்த சகோதரர், “உண்மைதான். பரவசத்தைப் பொறுத்தவரை எங்கள் கூட்டங்களை அந்த இடத்தில் நடக்கிற கூட்டங்களோடு ஒப்பிட முடியாது,” என்று கூறினார். உடனே அந்த இளம் சகோதரன், “நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அந்த இடத்தில் கிளர்ச்சியூட்டும் சூழல் இல்லவே இல்லை,” என்று கூறினார். மூத்த சகோதரர், “நீ என்ன சொல்லுகிறாய்? பரவசமூட்டும் கிளர்ச்சி இல்லையென்றால் அங்கு ஜீவன் எப்படி இருக்க முடியும்?” என்று வினவினார். அதற்கு அந்த இளம் சகோதரன், “அங்கு கூச்சல் போடுகிற விஷயமே இல்லை. இருந்தபோதும், அங்கு ஜீவன் இருக்கிறது. ஏனென்றால், ஜீவன் என்பது உணர்ச்சிபூர்வமாக பரவசமூட்டுவதாகவோ அல்லது கிளர்ச்சியூட்டுவதாகவோ அல்லது விருவிருப்பாகவோ அல்லது கூச்சலிடுவதாகவோ இருக்கத் தேவையில்லை,” என்று பதிலளித்தான். அப்போது அந்த மூத்த சகோதரர், “ஒருவேளை வாலிபர்கள் உணர்ச்சிகரமான கிளர்ச்சியை விரும்பக்கூடும். ஆனால், நானோ கருத்துநிறைந்த வார்த்தைகளை விரும்பக்கூடும். நான் ஆழமான வார்த்தைகளைக் கேட்கும்போது அங்கு நான் ஜீவனைச் சந்திக்கிறேன்,” என்று தத்துவமாகப் பேசினார். உடனே அந்த வாலிபன் அதற்கு மறுமொழியாக, “நீங்கள் ஆழமான வார்த்தைகள் என்று சொல்லுகிற வார்த்தைகளை நானும் அநேக வேளைகளில் கேட்டிருக்கிறேன்; ஆனால். நான் அங்கு எந்த ஜீவனையும் சந்திக்கவில்லை,” என்று கூறினான். பிரியமான மக்களே, இந்த இரண்டு சகோதரர்களின் உரையாடலிலிருந்து ஜீவன் என்பது

உணர்ச்சிகரமான பரவசமோ அல்லது கருத்துநிறைந்த வார்த்தைகளோ இல்லை என்பதை நாம் பார்க்க முடியும். ஞானத்தின் வார்த்தைகள், புத்திசாலித்தனமான பேசுதல்கள், காரணகாரியங்களோடு கூடிய விவாதங்கள், கருத்துநிறைந்த விளக்கவுரைகள் ஆகியவைகள் ஜீவனாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

சிலர் ஆச்சரியப்பட்டு, “ஜீவன் என்பது உணர்ச்சிகரமான கிளர்ச்சியோ அல்லது எழுச்சியூட்டும் எண்ணமோ இல்லை என்பது விநோதமாக இருக்கிறது. அப்படியானால் ஜீவனை எங்கே காண முடியும்? ஜீவன் என்றால் என்ன?” என்று விசாரிப்பார்கள். ஜீவனை விளக்கமாக விரித்துரைக்கும் இந்த விஷயத்தைத் தெரிவிக்க எங்களிடம் சிறந்த வழி இல்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இது உணர்ச்சியைவிட ஆழமானது; எண்ணத்தைவிட ஆழமானது என்று மட்டுமே எங்களால் கூற முடியும். ஒருவன் அதைச் சந்தித்தவுடன் தனக்குள் உயிர்ப்பிக்கப்படுவான்; இதுதான் ஜீவன் என்றழைக்கப்படுகிறது.

ஜீவன் என்றால் என்ன? ஜீவன் எண்ணத்தைவிட ஆழமானது; எண்ணம் ஜீவனைவிட ஒருபோதும் மிஞ்சிம்போக முடியாது. ஜீவன் உணர்ச்சியைவிட ஆழமானது; உணர்ச்சியை ஜீவனோடு ஒப்பிடும்போது அது மிகவும் மேலெழுந்தவாரியானது. எண்ணமானாலும் சரி அல்லது உணர்ச்சியானாலும் சரி, ஜீவனோடு ஒப்பிடும்போது அது புறம்பானது. அப்படியானால் ஜீவன் என்றால் என்ன? “நானே ஜீவன்,” என்று கர்த்தராகிய இயேசு பறைசாற்றினார். நாம் சந்திப்பதெல்லாம் ஒரு வகையான அனலான சூழல்தான், ஆவிக்குரிய ஓர் அனலான சூழல் என்றழைக்கம்படுகிற ஒரு சூழல்தான். இப்படியிருக்கையில் நாம் ஜீவனைச் சந்தித்துவிட்டோம் என்று அவசரப்பட்டு முடிவுசெய்துவிடவேண்டாம். அதற்குப் பதிலாக, எங்கிருந்து இப்பேர்ப்பட்ட சூழல் எழுகிறது என்று நாம் கேட்க வேண்டும். அனலான சூழலை உருவாக்குவதில் கைதேர்ந்த அநேகருக்கு கர்த்தரைப்பற்றி மிகவும் கொஞ்சமாகவே தெரியும் என்றும், பரவசமடையும் அநேகர் கர்த்தரைப்பற்றிய அறிவில் மிகவும் குறைவுள்ளவர்கள் என்றும் ஏராளமான அனுபவங்கள் உறுதிசெய்கின்றன. கிறிஸ்து மட்டுமே ஜீவன்; மற்றவையெல்லாம் ஜீவன் அல்ல.

ஜீவனை அறியும் பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஜீவன், நம் உணர்ச்சி எவ்வளவு கிளர்ச்சியானது அல்லது நம் எண்ணம் எவ்வளவு பன்மடங்கானது என்பதைச் சார்ந்திருக்கவில்லை. கர்த்தர் தம்மையே வெளியரங்கமாக்கியிருக்கிறார் என்பதையே முழுக்க முழுக்க சார்ந்திருக்கிறது. ஆகையால், கர்த்தரை அறிவதைவிட முக்கியமான வேறொன்று இல்லவே இல்லை. நாம் அவரை அறிகையில் ஜீவனைத் தொடுகிறோம். கிறிஸ்துவே நம் ஜீவன் என்பதின் பொருளை நாம் தேவனுக்குமுன்பாகப் பார்க்க வேண்டும். எளிதில் பரவசப்படுகிறவர்கள் அல்லது அசாதாரணமான புத்திசாலிகள் கர்த்தரை அறிந்த மக்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவரை அறிவதற்கு ஆவிக்குரிய பார்வை தேவை; இப்படிப் பார்ப்பது ஜீவன். இது நம்மை மறுசாயலாக்குகிறது. நாம் கர்த்தரை நம் ஜீவனாக அறிந்தால், ஆவிக்குரிய விஷயங்களில் இயற்கையான முயற்சிகளெல்லாம் முற்றிலும் வீணானவை என்று நாம் உணர்வோம். ஆகவே, நாம் அவரை மட்டுமே நோக்கிப் பார்க்கிறோம்.

நாம் முதன்முதலாக கர்த்தர்மேல் விசுவாசம் வைத்தபோது, அவரை நோக்கிப்பார்ப்பது என்றால் உம் மையாக என்னவென்பதை உணரவில்லை. ஆனால், எல்லாம் நம்மைச் சார்ந்திராமல் கிறிஸ்துவையே சார்ந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்தபிறகு, தொடர்ச்சியாக நாம் அவரை நோக்கிப் பார்க்கப் படிம்படியாகக் கற்றுக்கொள்கிறோம். நம் கிறிஸ்துவ நடையின் ஆரம்பத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நாம் பொருட்களைச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பினோம். எல்லாவற்றுக்காகவும் நம்மால் கர்த்தரை நம்பமுடியவில்லை. ஆயினும், நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கற்றுக்கொண்டபிறகு, அவரை நம்பவேண்டியதின் அவசியத்தை நாம் புரிந்துகொள்ள ஆரம்பித்தோம்—நமக்கு ஒவ்வொரு பொருளாகத் தருவதற்காக அவரை விசுவாசிக்கும் அர்த்தத்தில் அல்ல, மாறாக நம்மால் செய்யமுடியாத காரியத்தைச் செய்ய அவரை நம்புகிற அர்த்தத்தில். நாம் கிறிஸ்தவர்களான புதிதில் நாமே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற மனச்சார்பு இருந்தது. நாம் அவைகளைச் செய்யாவிட்டால் எதுவும் ஒருபோதும் நடக்காது அல்லது காரியங்கள் தாறுமாறாகப் போய்விடும் என்று நாம் பயந்தோம். ஆகவே, நாம் எல்லா நேரமும் வேலைசெய்துகொண்டேயிருந்தோம். பின்பு, கர்த்தரே ஜீவன் என்பதைப் பார்த்தபோது

எல்லாம் கிறிஸ்துவால்தானேதவிர, நம்மால் அல்ல என்பதை நாம் அறிகிறோம். இதன் விளைவாக, இளைம்பாறவும், அவரை நோக்கிப்பார்க்கவும் நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

தேவன் நமக்கு ஒவ்வொரு பொருளாகத் தருவதற்குப்பதிலாக, அவர் நமக்குத் தம் குமாரனைத் தருகிறார் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இதனால், நாம் எப்போதும் நம் இருதயங்களை உயர்த்தி, கர்த்தரை நோக்கிப்பார்த்து, "கர்த்தாவே நீரே என் வழி, கர்த்தாவே நீரே என் சத்தியம், கர்த்தாவே நீரே என் ஜீவன். கர்த்தாவே, உம்முடைய காரியங்கள் அல்ல, மாறாக நீரே என்னோடு தொடர்புடையவர்," என்று கூறமுடியும். ஆவிக்குரிய எல்லாக் காரியங்களிலும் நாம் கிறிஸ்துவைக் காணும்படிக்கு தேவன் நமக்குக் கிருபை அளிக்க நாம் அவரிடம் வேண்டுவோமாக. கிறிஸ்துவேயல்லாமல் வேறு வழியோ அல்லது சத்தியமோ அல்லது ஜீவனோ இல்லை என்று தினம் தினம் நாம் உறுதிப்படுத்தப்படுகிறோம். எவ்வளவு எளிதாக நாம் *காரியங்களை* வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் மாற்றிவிடுகிறோம் அல்லது அனலான சூழலை ஜீவன் என்றழைக்கிறோம் அல்லது தெளிவான எண்ணத்தை ஜீவன் என்று குறிப்பிடுகிறோம். பலமான உணர்ச்சியை அல்லது புறம்பான நடத்தையை நாம் ஜீவன் என்று நினைக் கிறோம். ஆனால், உண்மையில் இவை ஜீவன் அல்ல. கர்த்தர் மட்டுமே ஜீவன் என்பதை நாம் உணர்ந் தாக வேண்டும். கிறிஸ்துவே நம் ஜீவன். கர்த்தரே இந்த ஜீவனை நம்மில் வாழ்கிறார். நாம் கர்த்தரைத் தொடும்படிக்கு, புறம்பானதும் துண்டுதுண்டானதுமான அநேகக் காரியங்களிலிருந்து நம்மை விடு விக்க நாம் அவரிடம் வேண்டுவோமாக. எல்லாவற்றிலும் நாம் கர்த்தரைப் பார்ப்போமாக—வழி, சத்தியம், ஜீவன் ஆகியவைகளெல்லாம் அவரை அறிவதில் காணப்படுகின்றன. நாம் உண்மையாகவே தேவனுடைய குமாரனைச் சந்தித்து, அவரை நம்மில் வாழ அனுமதிப்போமாக. ஆமென்.